# கல்லூரி முதல்வர்களுக்கு ‘கொரோனா’ விழிப்புணர்வு



சிதம்பரம் அடுத்த சி.முட்லூர் அரசு கலைக் கல்லூரியில், கொரோனோ வைரஸ் குறித்து விழிப்புணர்வு கூட்டம், கல்லூரி முதல்வர் சாந்தி தலைமையில் நடந்தது.

**கிள்ளை, பிப். 9–**

உயர் கல்வித்துறை மற்றும் சுகாதார துறை இணைந்து, கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு கலைக் கல்லூரி முதல்வர்களுக்கு, கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சி, சிதம்பரம் அடுத்த சி.முட்லூர் அரசு கலைக்கல்லூரியில் நடந்தது.

கல்லூரி முதல்வர் சாந்தி தலைமை தாங்கினார். துறை தலைவர் மீனா வரவேற்றார். மருத்துவ அலுவலர்கள் சிவக்குமார், அருண்குமார் ஆகியோர் கொரோனோ வைரஸ் பரவும் விதம், தடுக்கும் வழிமுறைகள் குறித்து விளக்கினர்.

துறை தலைவர்கள் லோகராஜன், சேகர், அறிவழகன், என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர்கள் தினகரன், அறிவழகன் பங்கேற்றனர். என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் டார்லின் குயின் நன்றி கூறினார்.